085

# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF BUSINESS ADMINISTRATION / COMMERCE (EXTERNAL) - 2008 / 2009 HELD IN AUGUST - 2009

## BBA / COM 32 – FINANCIAL AND INVESTMENT ANALYSIS & PORTFOLIO MANAGEMENT

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. கல்குலேட்டர் பாவனை அனுமதிக்கப்பட்டுள்ளது. நிகழ்காலப் பெறுமதி அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது.**

**நேரம் : 03 மணித்தியாலங்கள்**

---

01. (அ) US நிறுவனத்தினுடைய 10% பிணைப்பத்திரம் முதிர்வடைவதற்கு 12 வருடங்களையும் வருடாந்த வேண்டப்பட்ட திரும்பல் வீதம் 14% யும் கொண்டு காணப்படுகின்றது. வட்டி அரையாண்டு அடிப்படையில் செலுத்தப்பட்டால் ரூபா 1000/- முகப் பெறுமதி கொண்ட பிணைப்பத்திரத்தின் பெறுமதியைத் தீர்மானிக்குக.

(ஆ) ஒரு வர்த்தக வங்கி ரூபா 100,000/- கடனை உமக்கு வழங்க விரும்புகின்றது. வங்கி உம்மிடமிருந்து 12% வட்டியை எதிர்பார்ப்பதோடு, வட்டியையும் முதலையும் சேர்த்து ஐந்து தவணைக் கட்டணங்களில் மீளச் செலுத்தப்பட வேண்டும் எனவும் வேண்டுகின்றது எனின், வருடாந்த கட்டணத்தின் தொகை என்ன?

(இ) உமது சகோதரர் ரூபா 100,000/- வை முதலீடு செய்வதற்காக வைத்திருக்கின்றார். இவர் ஐந்து வருடங்களில் ஆகக் குறைந்தது ரூபா 15,000/- சேர்க்க விரும்புகின்றார். இவர் முதலீட்டு வருமானம் சிறப்பாகக் காணப்பட்டால், நீண்ட காலத்திற்கு பணத்தினை முதலீடு செய்ய முடியும். இவர், பின்வரும் முதலீட்டு மாற்று வழிகளை எதிர்கொள்கின்றார். இம் முதலீடுகளுக்கு ஆகக் குறைந்தது ரூபா 100,000/- தேவைப்படுகின்றது.

(i) இலங்கையிலுள்ள வங்கியொன்று ஐந்து வருடகால வைப்புமீது 12% வருடாந்த கூட்டு வட்டி வீதத்தினை வழங்குகின்றது. வங்கி தற்போது ஐந்து வருடங்களுக்கு குறைந்த வைப்புகளுக்கு 8 % வட்டி செலுத்துகின்றது.

(ii) இலங்கையிலுள்ள மற்றுமொரு நிதி நிறுவனம் 6 வருடகால வைப்பின்மீது 10% வருடாந்த கூட்டு வட்டி வீதத்துடன், முழு முதலீட்டுக் காலத்திற்கும் பணத்தினை வைப்பிலிட்டால் இறுதி உபகாரமாக (Terminal Bonus) ரூபா 5000/- உம் வழங்கும்.

இதில் எம் முதலீடு சிறந்தது என உமது சகோதரருக்கு ஆலோசனை வழங்குக.

02. (அ) ஒரு கம்பனியிடைய எதிர்பார்க்கப்பட்ட ஒரு பங்கிற்கான பங்கிலாபம் (t=1) ரூபா 40/-. இப்பங்கிலாபம் தொடர்ச்சியாக 6% ஆல் அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. கழிவு வீதம் 14% ஆகக் காணப்பட்டால் ஒரு பங்கினுடைய பெறுமதி என்ன?

(ஆ) ஒரு கம்பனியினுடைய கடந்த ஆண்டுக்கான ஒரு பங்கிற்கான பங்கிலாபக் கொடுப்பனவு ரூபா 5.50 ஆக இருந்தது. இப் பங்கிலாபம் அடுத்துவரும் இரண்டு ஆண்டுகளுக்கு 10% ல் வளர்ச்சியடையும் எனவும், அதன்பிறகு இவ்வளர்ச்சி 5% ஆக தொடர்ந்து இருக்கும் எனவும் பணிப்பாளர்கள் எதிர்பார்க்கின்றனர். வேண்டப்பட்ட திரும்பல் வீதம் 15% ஆகக் கருதிக்கொண்டு, பங்கினுடைய பெறுமதியைக் கணிக்குக.

(இ) ABC நிறுவனம் ரூபா 1000/- முகப்பெறுமதியுடைய 8%, 4 வருட பிணையைக் கொண்டு காணப்படுகின்றது. இப்பிணைக்கான வட்டி வருடாந்தம் செலுத்தப்படுகின்றது.

(i) வேண்டப்பட்ட திரும்பல் வீதம் 15% ஆகக் காணப்பட்டால், பிணையினுடைய சந்தைப் பெறுமதி என்ன?

(ii) வேண்டப்பட்ட திரும்பல் வீதம் 12% ஆகக் குறைவடைந்தால், சந்தைப் பெறுமதி என்ன?

(15 புள்ளிகள்)

03. ஒரு கம்பனி, அதனுடைய மூலதனங்களுக்குரிய செலவுகளையும் மொத்த மூலதனச்செலவையும் கணிப்பீடு செய்ய விரும்புகின்றது. கம்பனியினுடைய நிதித் திணைக்களம், பிணைப்பத்திரங்கள், முன்னுரிமைப் பங்குகள், சாதாரண பங்குகள் போன்ற விற்பனைகளுடன் பின்வரும் செலவுகள் சம்மந்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டுகின்றது. கம்பனியினுடைய வரி வீதம் 35%.

ரூபா 1000/- முகப்பெறுமதியுடைய 12%, 10 வருட கால பிணைப்பத்திரங்களை ரூபா 970/- க்கு விற்பனை செய்ய முடியும். இதற்கு மேலாக, முகப்பெறுமதியில் 1% தரகர் செலவு ஏற்படும்.

ரூபா 100/- பெறுமதியுடைய 15% முன்னுரிமைப் பங்குகள் 10% வட்டத்தில் விற்கப்பட முடியும். தரகர் செலவாக ஒரு பங்கிற்கு ரூபா 2 தரகர்களுக்கு செலுத்துதல் வேண்டும்.

கம்பனியினுடைய சாதாரண பங்குகள் தற்போது ரூபா 125/- க்கு விற்பனை செய்யப்படுகின்றது. கம்பனி எதிர்வரும் வருட இறுதியில் ஒரு பங்கிற்கு ரூபா 15/- பங்கிலாபம் செலுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது. கம்பனியினுடைய கடந்த 6 வருடங்களுக்கான ஒரு பங்கிற்கான பங்கிலாபங்கள் பின்வருமாறு காணப்பட்டன.

| வருடம் | பங்கிலாபம் (ரூபா) |
|---|---|
| 1 | 1.50 |
| 2 | 1.20 |
| 3 | 1.90 |
| 4 | 160 |
| 5 | 2.30 |
| 6 | 2.50 |

புதிய பங்குகள் ரூபா 123/- க்கு விற்கப்பட முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. தரகர் கூலியாக ரூபா 2/- செலுத்த வேண்டும்.

மூலதனங்களுடைய சந்தை, புத்தக பெறுமதிகள் பின்வருமாறு காணப்படுகின்றன.

| | புத்தக பெறுமதிகள் (ரூபா) | சந்தைப் பெறுமதிகள் (ரூபா) |
|---|---|---|
| நீண்டகாலக்கடன் | 1800,000 | 1930,000 |
| முன்னுரிமைப் பங்குகள் | 450,000 | 520,000 |
| சாதாரண பங்குகள் | 6000,000 | 10000,000 |
| நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புகள் | 1500,000 | |

புத்தகப் பெறுமதியிலும், சந்தைப்பெறுமதியிலும் நிறையளிக்கப்பட்ட சராசரி மூலதனச் செலவைக் கணிக்குக.

(15 புள்ளிகள்)

04. ஒரு உற்பத்திப் பொருள் தொடர்பான பின்வரும் தரவுகளைக் கருத்திற் கொள்க.

ஒரு வருடத்திற்கு 6000 அலகுகளை உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படுகின்றது.

| | |
|---|---|
| விற்பனை விலை - ஒரு அலகிற்கு | ரூபா 450/- |
| மாறும் செலவு - ஒரு அலகிற்கு | 230/- |
| நிலையான செலவு- ஒரு அலகிற்கு | 110/- |

ரூபா 15,000/- செலவில் சந்தை ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு, அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு ஒரு ஆண்டுக்கு மேலதிகமாக 1000 அலகுகளை விற்க முடியும் என சுட்டி காட்டுகிறது.

மேலதிக அலகுகளை உற்பத்தி செய்வதற்கு தேவையான இயந்திர உபகரணங்களுக்கான ஆரம்ப முதலீடு ரூபா 250,000/- தேவைப்படுகின்றது. புதிய உபகரணங்களுக்கான பெறுமானத்தேய்வுக்கு மேலாக நிலையான செலவுகள் ஒரு ஆண்டுக்கு ரூபா 50,000/- ஆல் அதிகரிக்கும்.

நிறுவனம் நேர்கோட்டு பெறுமானத்தேய்வு முறையைப் பயன்படுத்துகின்றது. எஞ்சும் பெறுமதி எதுவும் எதிர்பார்க்கப்படவில்லை. வரி வீதம் 35% ஆகக் கருதிக் கொள்க. வேண்டப்பட்ட திரும்பல் வீதம் 15% ஆகும்.

நீர் இப் பிரேரணையை மதிப்பீடு செய்து, உமது சிபார்சுடன் பணிப்பாளர்களுக்கு சமர்ப்பிக்கக்க கூடிய அறிக்கையை தயாரிக்குக.

(15 புள்ளிகள்)

05. கடந்த 06 ஆண்டுகளில் ஒரு முதலீட்டாளர் பின்வரும் வருடாந்த திரும்பல் வீதங்களை உடைய இரண்டு பங்குகளைக் கொண்டிருந்தார்

| வருடம் | பங்கு X | பங்கு Y |
|---|---|---|
| 2003 | 0.18 | 0.08 |
| 2004 | 0.07 | 0.04 |
| 2005 | 0.12 | 0.09 |
| 2006 | -0.03 | -0.03 |
| 2007 | -0.01 | -0.02 |
| 2008 | 0.06 | 0.08 |

(i) ஒவ்வொரு பங்குக்குமான வருடாந்த இடை திரும்பல்வீதத்தைக் (arithmetic mean rate of return) கணிப்பிடுக. இவ் அளவீட்டிற்கு இணங்க மிகச்சிறந்த பங்கு எது?

(ii) ஒவ்வொரு பங்குக்குமான வருடாந்த திரும்பல்வீதத்தினுடைய நியம விலகலைக் கணிப்பீடுக. இவ் அளவீட்டிற்கு இணங்க மிகச்சிறந்த பங்கு எது?

(iii) ஒவ்வொரு பங்குக்குமான விலகல் குணகத்தைக் (Coefficient of variation) கணிக்குக. இவ் இடர் கணிப்பீட்டின் படி எந்தப் பங்கு சிறந்தது?

(iv) ஒவ்வொரு பங்குக்குமான பெருக்கல் இடை திரும்பல் வீதத்தைக் (Geometric mean rate of return) கணிப்பிடுக.

(v) X பங்கில் 40% உம் Y பங்கில் 60% உம் என்ற விகிதாசார ஒரு கலவையில் ஒன்றிணைக்கப்பட வேண்டும் என சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இக் கலவையினுடைய எதிர்பார்க்கப்பட்ட திரும்பல், அதனுடைய இடர் என்பவற்றை கணிக்குக. இணைவுக் குணகம் 0.6 எனக் கருதிக்கொள்க.

(vi) X யும் Y யும் சிபார்சு செய்யப்பட்ட கலவையில் ஒன்றிணைப்பதினுடைய நன்மைகள் என்ன?

(20 புள்ளிகள்)

***